(இ) இக்கால்வாயின் மதகுகளைப் புதுப்பித்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், இணைப்பு நில வாய்க்கால் வெட்டுதல் ஆகிய புதுப்பித்தல் வேலைகளுக்கான வரைபடங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப் படுகின்றன. இவை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவாக்கப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த இராஜா வாய்க்காலை புதுப்பிப்பதால் மேலும் அதிகமான நீர்ப்பாசனம் செய்யலாம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த வாய்க்கால் பவானி ஆற்றின் குறுக்கே உள்ள கொடிவேரி அணைக்கட்டிலிருந்து வலதுபுறமாக பாய்கிறது. இதனால் 18,444 ஏக்கர் நிலங்கள் பயன் அடைகின்றன. கடைகோடி நிலங்களுக்கு தண்ணீர் பற்றுக்குறை இருப்பதால் இவ்வாய்க்காலை புதுப்பிக்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அந்த வாய்க்காலில் ஏற்கனவே இவ்வளவு கியுசெக்ஸ் தண்ணீர் விடவேண்டும் என்னும்படியான ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி தவறுமல் பாசனத் திற்கு தண்ணீர் விடப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. க. ர. நல்லசிவன் : பாசனம் வேண்டிய அளவுக்கு சீர்ப்படுத்திக் கொடுக்க அரசாங்கம் திட்டம் தீட்டி இருக்கிறதா ? அந்த திட்டம் எப்போது செயல்படும் என்று தெரிவிக்க வேண்டு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டத் திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் 2-3 மாதங் களில் முடிவாக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

கும்மங்குடி—பேரையூருக்குப் பாசன வசதி

* 201 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டைப் பகுதி யில் ஓடிக்கொண்டிருக்கும் வெள்ளாற்றிலிருந்து கும்மங்குடி—பேரை யூரை அடுத்துக் கால்வாய் வெட்டி நமனசமுத்திரம் பெரிய கண் மாயிலிருந்து முனை சந்தைக்கண்மாய் வரைக்கும் தண்ணீரைப் பாய்ச்சி நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இந்த மாதிரி திட்டம் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை பகுதியில் இருக்கும் வெள்ளாற்றிலிருந்து கும்மங்குடி–பேரையூர் ஆகிய இடத்திலிருந்து வெட்டப்பட்ட கால்வாய் ஒன்று சீர்கேடாக இருந்து வருகிறது. கால்வாயைச் சீர்படுத்தி பேரையூரை அடுத்து மூடு வாயில் ஒன்றை அமைத்து, இதைப் பயன் உள்ளதாக்கும் வகையில் ஆவன செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வெள்ளாற்றில் இருக்கும் தண்ணீர் போதுமானதாக இல்லாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

திரு. கே. வினயகம் : Sir, on a point of order கண்மாய் என்பது தமிழ் வார்த்தையா, ஆங்கில வார்த்தையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் வார்த்தை தான்.

திரு. கே. வினயகம் : தமிழ் வார்த்தை தான் என்றால் ஏன் ஆங்கிலத்தில் அப்படியே போடவேண்டும். you should not murder English like this. கண்மாய் is Tamil word. Lake is an English word.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆங்கில சொற்களை அப்படியே தமிழில் எழுதுவது உண்டு. அதுபோல் தமிழ் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுவது தவறு இல்லை.

எப்போதும்வென்றான் அருகில் கண்மாய் அமைப்பு

* 202 வினா—திரு. மு. முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தைச் சேர்ந்த எப்போதும் வென்றான் அருகில் புதிதாக ஒரு கண்மாய் அமைக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அரசு அனுமதி பெற்று வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. மு. முத்தையா : பேரவைத் தலைவரவர்களே, கோவில் பட்டி தாலூக்காவில் 1969-ல் அங்கீகரிக்கப்பட்ட கண்மாய்களை கட்டும் செயற்குறிப்பு அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா ? வேலை ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவில்பட்டி தாலூக்கா பற்றிய விவரங்கள் கனம் உறுப்பினர் அறிய விரும்பினால் தனியாக கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன். எப்போதும் வென்றான் கிராமத்திற்கு அருகே மலட்டாறின் குறுக்கே 128 கன அடி கொள்ளளவு கொண்ட ஒரு கண்மாய் அமைக்க செயற்குறிப்பு